# தமிழ்நாடு எப்போதும் சமத்துவப் பூங்காவாக, சகோதரத்துவத்துடன் திகழ

# சாதி, மதம் பார்க்காமல் சமத்துவப் பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்!

**சென்னை, ஆக.24–**

**தமிழ்நாடு எப்போதும் சமத்துவப் பூங்காவாக, சகோதரத்துவத்துடன் திகழ, சாதி, மதம் பார்க்காமல் சமத்துவப் பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்! என்று, நுங்கம்பாக்கம் குட்ஷெப்பர்டு கான்வென்ட் நூற்றாண்டு விழாவில் உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டார்.**

## நுங்கம்பாக்கம் – குட்ஷெப்பர்டு பள்ளி நூற்றாண்டு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரை!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.8.2025) சென்னை, நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற குட்ஷெப்பர்டு பள்ளியின் நூற்றாண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:–

நல்ல முறையில் வழி நடத்துபவர்தான் நல்ல ஆயன்! அத்தகைய பேரை தாங்கி நின்று, நூற்றாண்டு கண்டுள்ள இந்த குட்ஷெப்பர்டு பள்ளியை வாழ்த்தி, அறிவார்ந்த, திறமைமிக்க மாணவர்களை வளர்த்தெடுக்கும் தாளாளர் அருணா ஜார்ஜ், முதல்வர் ஆனி தாமஸ் மற்றும் ஆசிரியர் பெருமக்களுக்கும், பெற்றோருக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்!

### சென்னையின் அடையாளங்களில் குட்ஷெப்பர்டு பள்ளியும் ஒன்று!

இன்றைக்கு சென்னை நாள்! இந்த சென்னைக்கு பல்வேறு வரலாற்று அடையாளங்கள் இருக்கிறது! அப்படிப்பட்ட அடையாளங்களில் ஒன்றுதான், நூற்றாண்டு கண்டுள்ள இந்த குட்ஷெப்பர்டு பள்ளியும் என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்!

கல்வி எனும் பேராயுதத்தை கடைக்கோடி மக்களிடமும் கொண்டு வந்து சேர்த்த வரலாறும், பெருமையும் கிறித்துவ தொண்டு நிறுவனங்களுக்கு இருக்கிறது! இந்த நெடிய பாரம்பரியத்தில் குட்–ஷெப்பர்டு பள்ளிக்கு என்று ஒரு தனி இடம் இருக்கிறது! இதனுடைய வரலாற்றை நான் எண்ணிப் பார்க்கிறேன்

1835–ல் பிரான்ஸ் நாட்டில், பின்தங்கிய மக்களுக்கு கல்வியையும், வாழ்க்கையையும் வழங்குவதற்கு உருவாக்கப்பட்ட இந்த நிறுவனம், 1854–ல் இந்தியாவுக்குள் நுழைந்து 110 கான்வெண்ட்டுகளை உருவாக்கினார்கள்.

### பல திறமையானவர்களை உருவாக்கியப் பள்ளி!

1925–ல் இந்த பள்ளியை தொடங்கினார்கள். நூறு ஆண்டுகள் ஆகிவிட்டது. இந்த நூறு ஆண்டுகளில், மதிப்பிற்குரிய முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் அவர்களைப்போல, ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்து, முன்னேறி, உயர்ந்த பொறுப்புகளில் உட்கார்ந்து, அரசியல் தலைவர்களாக, நேர்மையான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் அதிகாரிகளாக, மருத்துவர்களாக, விளையாட்டு வீரர்களாக, தொழில் முனைவோர்களாக திறமையான கலைஞர்களாக புகழ் பெற்றிருக்கிறார்கள்!

இப்படி, இலட்சக்கணக்கானோர் புகழ் பெற வேண்டும் என்றுதான் இந்த நிறுவனத்தை தொடங்கிய, புனித மேரி யூப்ரேசியா அவர்கள் விரும்பியிருப்பார்கள்! அவருடைய தொலைநோக்குச் சிந்தனையை நனவாக்க உழைத்த அத்தனை பேரையும் நினைவுகூர்ந்து போற்ற வேண்டியது நம்முடைய கடமை!

கல்வியைப் பற்றி புனித மேரி யூப்ரேசியா அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், "கல்வி என்பது, மனித ஆளுமையில், உளவியல் ரீதியாகவும், உடல் ரீதியாகவும், அறிவு ரீதியாகவும், அழகியல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் சிறந்த அனைத்தையும் வளர்ப்பது என்று சொன்னார். அதாவது, பாடப்புத்தகங்களைக் கடந்து, பண்பாட்டை வளர்க்கும் கல்வியை வடிவமைத்தார்கள்! அதனால்தான், அறிவுத் தாகம், இரக்கம் மற்றும் தைரியம், பொறுப்பான குடியுரிமை, பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு, பங்கேற்பு மற்றும் ஜனநாயகம், வேற்றுமையில் ஒற்றுமை ஆகிய கொள்கைகள் கொண்டவர்களாக மாணவர்களை உருவாக்கவேண்டும் என்று கட்டளையிட்டார். அந்தக் கட்டளையை ஏற்று, பசுமையான இந்தப் பள்ளி வளாகத்தில், கல்வியின் பன்முகத் திறமைகளையும் கற்றுத் தந்து ஏராளமான திறமைசாலிகளை உருவாக்கியிருக்கிறீர்கள்!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.8.2025) சென்னை, நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற குட் ஷெப்போர்டு பள்ளியின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். இவ்விழாவில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.நா.எழிலன், இனிகோ இருதயராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை ஜோ அருண், கோவா தலைமை ஆயர் கார்டினல் பிலிப்பி, ரோம் நாட்டைச் சேர்ந்த அருட்சகோதரி ஜோசிடா, மத்திய கிழக்கு இந்திய குட் ஷெப்போர்டு குழும தலைமை அருட்சகோதரி புஷ்பா லூயிஸ், பள்ளி தாளாளர் அருட்சகோதரி அருணா ஜார்ஜ், பள்ளி முதல்வர் அருட்சகோதரி ஆனி தாமஸ் மற்றும் குட் ஷெப்போர்டு பள்ளி குழுமத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தங்குமிடம் வழங்கும் 'ரோஷினி நிவாஸ்' என்று சமூக சேவை நிறுவனங்களையும் நடத்திக் கொண்டு வருவதற்கு என்னுடைய வாழ்த்துகள்!

இங்கே மாணவர்கள் இருக்கிறீர்கள். ஒரு காலத்தில் கல்வி என்பது, நமக்கு மறுக்கப்பட்ட ஒன்று! ஏராளமான போராட்டங்களுக்குப் பிறகுதான் கல்விக் கதவுகள் நமக்கு திறக்கப்பட்டது! இப்பொழுதும் கல்விக்காக போராடும் மக்கள் இருக்கிறார்கள்.

கல்வியை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகத்தான், காலை உணவுத் திட்டம், நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் என்று நிறைய திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்! இப்போது கூட பள்ளி மாணவர்களுக்காகவே சிறப்புப் பேருந்துகள் தொடங்கியிருக்கிறோம். நாம் அனைத்துத் தரப்புக்கும் இத்தனை திட்டங்களை தொடங்கி எல்லார்க்கும் எல்லாம் என்று செயல்படுகிறோம். ஆனால், இந்திய அளவில், பல மாநிலங்களில் வெறுப்புணர்வு தூண்டப்படுகிறது. அதற்கு அரசே துணைபோகிறது. இதுவரை இல்லாத அளவுக்கு, இந்தியாவில் சிறுபான்மையினர் நெருக்கடிக்கு ஆளாகி இருக்கிறார்கள். இது எல்லாம் நிரந்தரமல்ல!

### மத நல்லிணக்கத்தை கெடுக்கும் சக்திகளின் கொட்டம் நீடிக்காது!

இந்தியாவின் மதநல்லிணக்கத்தை கெடுக்க நினைக்கின்ற சக்திகளின் கொட்டம் அதிக நாள் நீடிக்காது! சாதி, மத பிரிவினை பார்க்காமல், எல்லோரையும் சமமாக நடத்துகின்ற பண்பை பள்ளிக்கூடங்களிலேயே நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். தும்பை விட்டுவிட்டு வாலை பிடிக்க கூடாது என்று சொல்லுவார்கள். அப்படிதான், தமிழ்நாடு எப்போதும் சமத்துவப் பூங்காவாக சகோதரத்துவத்துடன் திகழவேண்டும் என்றால், மாணவர்களான நீங்கள் இப்போதே அந்த எண்ணத்துடன் வளர்ந்தால்தான் முடியும்! அதனால்தான், பள்ளி நிகழ்ச்சியில் கூட, அரசியலும், அட்வைசும் பேச வேண்டியதாக இருக்கிறது.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.8.2025) சென்னை, நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற குட் ஷெப்போர்டு பள்ளியின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு "100 Years of Shepherding என்ற சிறப்பு மலரினை வெளியிட்டார். இவ்விழாவில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு. நா. எழிலன், இனிகோ இருதயராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை ஜோ அருண், கோவா தலைமை ஆயர் கார்டினல் பிலிப்பி, ரோம் நாட்டைச் சேர்ந்த அருட்சகோதரி ஜோசிடா, மத்திய கிழக்கு இந்திய குட் ஷெப்போர்டு குழும தலைமை அருட்சகோதரி புஷ்பா லூயிஸ், பள்ளி தாளாளர் அருட்சகோதரி அருணா ஜார்ஜ், பள்ளி முதல்வர் அருட்சகோதரி ஆனி தாமஸ் மற்றும் குட் ஷெப்போர்டு பள்ளி குழுமத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சமூக சேவை நிறுவனங்களையும் நடத்தி வருவதற்கு வாழ்த்துகள்!

கல்விப் பணிகளை கடந்து, சமூக சேவையிலும் ஈடுபட்டு, சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட, கல்வி மறுக்கப்பட்ட, கல்வி கற்க இயலாத பெண்களுக்கு, கல்வியையும், வாழ்வாதாரத்தையும் வழங்க, 'மரியன் ஹோம்', 'மொட்டுக்கள் இல்லம்', நடுத்தர, விளிம்பு நிலைப் பெண்களுக்கான பாதுகாப்பான

சமூகப் படிநிலையில் பலருக்கும் அனைத்து வாய்ப்புகளும் கிடைப்பதில்லை. வாய்ப்பு கிடைப்பவர்கள், அதனால் வரும் திறமையை, வாய்ப்பு இல்லாதவர்களுக்கு கொண்டு சேர்க்கவேண்டும்! இது தான், புனித மேரி யுப்ரேசியா போன்றவர்கள் ஆற்றிய தொண்டு!

இன்றைக்கு நல்ல பள்ளியில் படிக்கின்ற நீங்கள், அடுத்து, பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு என்று படித்து முன்னேறவேண்டும்.

> **சமூகப் படிநிலையில் பலருக்கும் அனைத்து வாய்ப்புகளும் கிடைப்பதில்லை. வாய்ப்பு கிடைப்பவர்கள், அதனால் வரும் திறமையை, வாய்ப்பு இல்லாதவர்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும்! இதுதான், புனித மேரி யுப்ரேசியா போன்றவர்கள் ஆற்றிய தொண்டு!**

### தேவையான அறிவைப் பெற மாணவர்களுக்கு ஏராளமான வாய்ப்புகள்!

இன்றைக்கு Science எவ்வளவோ வளர்ந்துவிட்டது. உங்களுக்குத் தேவையான அறிவை பெற, நிறைய Options இருக்கிறது! அதிலும் இப்போது A.I–யின் வளர்ச்சி புது புரட்சியையே உண்டாக்கிக் கொண்டிருக்கிறது! அதற்காக, "எல்லாவற்றுக்கும் A.I. இருக்கிறது! நாம் எதற்கு படிக்கவேண்டும் என்று நினைத்துவிடாதீர்கள். எந்த கண்டுபிடிப்பையும் நீங்கள் உங்கள் வளர்ச்சிக்காகதான் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, அது உங்களுடைய சிந்தனையை சிதைக்க அனுமதிக்க கூடாது! அதே போல, உங்கள் Role Model–ஐ Instagram–ல் தேடாதீர்கள்! பொழுதுபோக்கு வாழ்க்கையின் ஒரு அங்கம்தான்! அதுவே வாழ்க்கை இல்லை!

சுருக்கமாகச் சொல்லவேண்டும் என்றால், நீங்கள் Reels பார்ப்பதெல்லாம் Reality என்று நம்பிவிடாதீர்கள். Likes, Views–ல் கெத்து இல்லை! Marks, Degrees–ல் தான் உண்மையான கெத்து இருக்கிறது! படிப்பதுடன் நன்றாக விளையாடுங்கள். உடல் நலனையும் பார்த்துக்கொள்ளுங்கள். ஆசிரியர்களும் இன்றைக்கு இருக்கின்ற பிள்ளைகளுக்கு ஏற்றது போல Upgrade ஆகவேண்டும்!

### நல்ல ஆயராக இருந்து பிள்ளைகளை முன்னேற்ற வேண்டும்!

பெற்றோர்களும் "நம்முடைய பிள்ளைகள் என்ன நினைக்கிறார்கள்? என்று காது கொடுத்து கேளுங்கள். மனதுவிட்டு பேசுங்கள். அவர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் பயப்படாமல், நம்மிடம் தைரியமாக Share செய்யவேண்டும்! அந்த நம்பிக்கையை அவர்களுக்கு நீங்கள் கொடுக்கவேண்டும். பிள்ளைகளிடம், உன் பெஸ்ட் ஃபிரண்ட் யாரு என்று கேட்டால், "எங்க அப்பா – அம்மா என்று சொல்லவேண்டும். அப்படி பழகுங்கள்! கல்வி – நண்பர்கள் – சூழல் – இதுதான் பிள்ளைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கும்! எனவே, நல்ல ஆயராக இருந்து, பிள்ளைகளை முன்னேற்ற வேண்டும் என்று அனைவரையும் வாழ்த்தி, குட்ஷெப்பர்டு பள்ளிக்கு நூற்றாண்டு வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்து, இந்த இனிய வாய்ப்பைத் தந்த இந்த பள்ளியின் நிர்வாகத்திற்கு மீண்டும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பீகார் மாநிலம் ராஜ்கிரில் 29.8.2025 முதல் 7.9.2025 வரை நடைபெற உள்ள "ஹீரோ ஆசிய ஹாக்கி கோப்பை 2025" யை தமிழ்நாட்டில் பொதுமக்களின் பார்வைக்காக நேற்று முன்தினம் (22.08.2025) அறிமுகப்படுத்தி, டிராபி சுற்றுப்பயணத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, இந்திய ஹாக்கி சம்மேளனத்தின் பொருளாளரும் தமிழ்நாடு ஹாக்கி யூனிட் தலைவருமான சேகர் ஜெ. மனோகரன், தமிழ்நாடு ஹாக்கி யூனிட் பொருளாளர் கே.இராஜராஜன், தமிழ்நாடு ஹாக்கி யூனிட் இணை செயலாளர் டி.கிளெமென்ட் மற்றும் விளையாட்டு வீரர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாவின் அவர்கள், தேனி மாவட்ட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதியில் தங்கி பயிற்சி பெற்று, ஆசிய சாம்பியன்ஷிப் போட்டி 2025 ல் தங்கப்பதக்கம் வென்ற கூடைப்பந்து வீரர் யு.எஸ் கஜித்க்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காக 38,073 ரூபாய்க்கான காசோலையினை நேற்று முன்தினம் (22.8.2025) வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.